**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**<u>O.S.No. 15/2021</u>**

PW2–சம்பத் நாள்.15.07.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் நெடுவாசல் கிராமத்தில் குடியிருக்கிறேன். வழக்கின் வாதி எனக்கு சகலை உறவு ஆவார். பிரதிவாதி அகிலாண்டேஸ்வரி எனக்கு சின்னம்மா முறை வேண்டும். பிரதிவாதி எனக்கு உறவுமுறை இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஏற்கனவே பழக்கவழக்கம் இல்லை. தாவா சொத்தின் பரப்பளவு துறைமங்கலம் கிராமத்தில் உள்ள சொத்து 34 ஏர்ஸ் விஸ்தீர்ணம் மற்றும் செங்குணம் கிராமத்தில் உள்ள சொத்து 48 ஏர்ஸ் விஸ்தீர்ணம் ஆகும். தாவா சொத்து அதிக மதிப்புடைய சொத்து என்றும், திருச்சி மற்றும் சென்னை, பெரம்பலூர் பகுதியில் இருந்து பல்வேறு நபர்கள் அதை கிரையம் கேட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியும், வாதியும் எப்படி கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதியும் , திருஞானமும் என்னிடம் இடத்தை விற்று கொடுக்க சொன்னார்கள். நான் வாதியிடம் இடத்தை பேசிவிட்டேன். 18.08.2020ம் தேதி முதலில் வாதியிடம் இதுசம்மந்தமாக பேசினேன். இதுசம்மந்தமாக நான், வாதி, பிரதிவாதி மற்றும் திருஞானமும் பேசினோம். சித்தளி கிராமத்தில் காலை 11.00 மணியளவில் பேசினோம். சித்தளி கிராமத்திற்கும் பெரம்பலூர்க்கும் இடையே சுமார் 10 கீ.மீ தூரம் இருக்கும். தாவா சொத்து சம்மந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகம் பெரம்பலூர் மற்றும் வாலிகண்டபுரத்தில் உள்ளது. ஒரு ஏக்கர் 2கோடியே 10 இலட்சம் என்றும், மொத்தம் 4கோடியே 10 இலட்சத்திற்கு பேசினோம். நான் சொல்லும் காலகட்டத்தில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.10 கோடிக்கு மேல் பெறும் என்றால் சரியல்ல. பேசிய விவரத்தை ரூ.100/– தாளில் ஒப்பந்தமாக எழுதினோம். அன்று காலை 10.00 மணியளவில் வாதி பெரம்பலூரில் உள்ள ரூபா என்ற பத்திரம்

விற்பனையாளரிடம் பத்திரதாள் வாங்கிவந்தார். அந்த பத்திர காகிதத்தில் டைப் செய்யப்பட்டது. வாதி தான் பெரம்பலூரில் அதை டைப் செய்து வாங்கி வந்தார். சித்தளிக்கு டைப் செய்து சுமார் 11.30 மணியளவில் கொண்டு வந்தார். வாதினுடைய சித்தளி வீட்டில் வைத்து கையெழுத்து செய்யப்பட்டது. அன்று கிரையம் பேசும் விவரம் வாதிக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் முதல் நாள் தெரியும். ஒப்பந்தத்தில் முதலில் அகிலாண்டேஸ்வரி கையெழுத்து போட்டார். அதன்பின்னர் திருஞானம் கையெழுத்து போட்டார். அதன்பிறகு வாதி போட்டார். 4வது நான் சாட்சி கையெழுத்து போட்டேன். யார் டைப் செய்தார்கள் மற்றும் தயார் செய்தார்கள் என்ற விவரத்தில் கையெழுத்து செய்யப்பட்டது. அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் கீழே பார்க்கவில்லை. வாதி பெரம்பலூரில் டைப் செய்த கொண்டு வந்த ஒப்பந்ததில் யார் தயார் செய்தார்கள் என்ற விவரத்தில் கையெழுத்து முன்பே போடப்பட்டு இருந்ததா என்று எனக்கு தெரியாது. கையெழுத்து போட்டவுடன் வாதி வீட்டில் இருந்து உடனடியாக ரூ.15இலட்சம் முன்பணமாக பிரதிவாதியிடம் கொடுத்தார். அப்போது அக்கம் பக்கம் வீட்டுகாரர்கள் யாரும் இல்லை. நான் கடந்த 30 வருடங்களாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். தொகை விவரம் அதிகமாக இருப்பதாலும் வாதி , பிரதிவாதிக்கு இடையே ஏற்கனவே அறிமுகம் இல்லாததாலும் ஒப்பந்தத்தை பதிவு செய்யவேண்டுமென்று நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சாட்சி தானாக உறவுமுறை என்பதால் சொல்லவில்லை என்று கூறுகிறார். பிரதிவாதி எனக்கு உறவுமுறை என்பதால் சொல்லவில்லை. பொன்னுசாமியின் மனைவி இந்த பிரதிவாதி என்றும், மற்றும் ஒரு வீரம்மாள் என்பவர் தான் என்றும் கூறி முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த இரண்டு வழக்குகளையும் கூட்டாக விசாரித்ததில் விசாரணையின் போது நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புரை நகலை வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைக்கு எதிராக வீரம்மாள் பெரம்பலூர் சார்பு

நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து அது இன்றுவரை நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சம்மந்தமாக மேல்முறையீடு எதுவும் உள்ளதா என்று பிரதிவாதியிடமோ, அல்லது அவருடைய வழக்கறிடமோ நான் விசாரிக்கவில்லை. ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்று வில்லங்கசான்று எடுத்து பார்த்து கிரையம் பேசவில்லை. தாவா 1ம் அயிட்ட சொத்து பொருத்து மேற்படி வீரம்மாளும், வீரமுத்துவும் சேர்ந்து ரஞ்சித்குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சித்தளியில் உள்ள ரமேஷ் என்பவர் என்னுடைய சொந்த மைத்துனர் ஆவர். தாவா 2ம் அயிட்ட சொத்து பொருத்து மேற்படி ரமேஷ் பெயருக்கு பிரதிவாதி கிரைய பத்திரம் ஏற்படுத்தி உள்ள விவரம் எனக்கு தெரியாது. 18.08.2020ம் தேதி ஒப்பந்தம் ஏற்பட்டு பிரதிவாதி பணம் வாங்கிய பின்னர் திருஞானத்தையும், பிரதிவாதியையும் பெரம்பலூர் அழைத்து வந்து நான் பஸ் ஏற்றி விட்டேன். ஒப்பந்ததில் என்ன எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ரூ.15இலட்சம் முன்பணமாக கொடுக்கப்பட்டு மீதி தொகையை 6 மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்று எழுதப்பட்டது. பிரதிவாதி எப்படி பத்திரம் தர வேண்டுமென்று ஒப்பந்ததில் கூறப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதி பணக்காரர் ஆவார். 10 ஏக்கர் நிலம் உள்ளது. சிமெண்ட் கடை, பெயிண்ட் கடை வைத்துள்ளார். கடைகளை வாடகைக்கு விட்டுள்ளார். வாதியின் வசதி குறித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்று பஸ் ஏற்றி விட்ட பின்னர் பிரதிவாதியை பார்த்து அல்லது பிரதிவாதி எங்களிடம் கிரையம் பற்றி ஏதும் கேட்டாரா என்றால் நான், வாதி, ரமேஷ், கந்தசாமி பிரதிவாதியிடம் சென்று கேட்டோம். எப்போது கேட்டோம் என்றால் டைம் முடிவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு கேட்டோம். 10.02.2021ம் தேதி வாக்கில் கேட்டோம். அதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு 01ம் தேதி வாக்கில் நாங்கள் நால்வரும் சென்று கேட்டோம். அவ்வாறு கேட்கும் போது இரண்டு முறையும் பிரதிவாதி எழுதி தருவதாக சொன்னார். அதன்பிறகு வாதி ஏன் நோட்டிஸ்

அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து நான் சொல்லும் கிரைய ஒப்பந்த காலத்தில் ரூ.10 கோடி மதிப்பு பெறும் என்றும் நானும், என் சகலையான வாதியும் சேர்ந்து சொத்தை அபகரிக்க மோசடியாக தாவா கிரைய ஒப்பந்த்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியோ, திருஞானமோ கையெழுத்து செய்யவில்லை என்றும், மோசடியாக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையாக கிரய ஒப்பந்தம் செய்திருந்தால் பதிவு செய்திருப்போம் என்றும், மோசடியாக ஒப்பந்தம் என்பதால் தான் அதை பதிவு செய்யாமல் நாங்களாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக பிரதிவாதி மீது காவல்துறையில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க நானும், வாதியும் சேர்ந்து மோசடியாக மற்றும் போர்சரியாக கிரைய ஒப்பந்தம் தயார் செய்து வாதி என் சகலை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று முன்பணம் ரூ.15 இலட்சம் நான் சொன்ன தேதியில் பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்மீதும், வாதி மீதும் மோசடி செய்துவிட்டதாக காவல்துறையில் பிரதிவாதி புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.